GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL
Perundurai R.S.
PH: 9486379461, 8344933377

No. of Printed Pages : 7

+1 311180

**4301 (NS)**

**XI - SEPTEMBER 2020**

பதிவு எண் | S | E | P | 2 | 0 | 2 | 0 |

# பகுதி I — பொதுத் தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

**குறிப்பு :** (அ) **அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. **14x1=14**

(ஆ) கொடுக்கப்பட்ட **நான்கு** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

**1.** நன்னூலின் ஆசிரியர் ________.

(அ) தொல்காப்பியர் (ஆ) அகத்தியர்

(இ) பவணந்தி முனிவர் (ஈ) திருவள்ளுவர்

**2.** பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே-இத்தொடரில் 'பெருமிதம்' என்னும் பொருளுணர்த்தும் சொல் ________.

(அ) மறுத்து (ஆ) சிறுமது

(இ) மதுகை (ஈ) உண்ணும்

[ திருப்புக

3. இன்குலாபின் கவிதைகள், முழுமையாக __________ என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன.

(அ) உயிர்த்தெழும் காலத்துக்காக

(ஆ) கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்

(இ) ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்

(ஈ) கூவும் குயிலும் கரையும் காகமும்

4. ''துணையாய் வருவது தூயநற் கல்வி'' என்னும் அடிகள் இடம் பெற்ற நூல் :

(அ) திருமந்திரம்

(ஆ) நாலடியார்

(இ) ஔவையார்

(ஈ) வளையாபதி

5. ஃப்ரெஸ்கோ வகை ஓவியங்கள் காணப்படும் இடம் __________.

(அ) காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருவில்லிபுத்தூர்

(ஆ) தஞ்சாவூர், அஜந்தா, திருவில்லிபுத்தூர்

(இ) அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல்

(ஈ) காஞ்சிபுரம், சித்தன்னவாசல், எல்லோரா

6. சுந்தர ராமசாமி கவிதை எழுத வைத்துக் கொண்ட புனைபெயர் __________.

(அ) பிரபஞ்சன் (ஆ) சுஜாதா (இ) மீரா (ஈ) பசுவய்யா

7. மொழி இறுதியில் வரும் தமிழ் எழுத்துகள் எத்தனை ?

(அ) பன்னிரண்டு

(ஆ) பதினெட்டு

(இ) இருபத்து நான்கு

(ஈ) இருபத்து இரண்டு

8. கலை + அறிவு புணரும் புணர்ச்சி வகை __________.

(அ) குற்றியலுகரப் புணர்ச்சி

(ஆ) உடம்படு மெய்ப் புணர்ச்சி

(இ) முற்றியலுகரப் புணர்ச்சி

(ஈ) பண்புப் பெயர்ப் புணர்ச்சி

GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL
Perundurai R.S.
PH: 9486379461, 8344933377

9. 'மழை போலக் கொடுக்கும் கை' என்பது __________ அடிப்படையில் தோன்றிய உவமை.

(அ) உரு (ஆ) மெய் (இ) பயன் (ஈ) வினை

10. கலைச்சொற்கள், பெரும்பாலும் __________ பெயர்களாகவே இருக்கும்.

(அ) காரணப் (ஆ) சிறப்புப் (இ) பொதுப் (ஈ) வினைப்

11. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க :

(அ) காவலாளி (ஆ) மேலாளர் (இ) உதவியாளர் (ஈ) ஆசிரியர்

12. ஈரொற்று மெய்ம்மயக்கமாய் வரும் எழுத்துகள் :

(அ) க், ச், ய் (ஆ) ய், ர், ழ் (இ) த், ப், ர் (ஈ) ங், ஞ், ழ்

13. Globalisation என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்க் கலைச் சொல் __________

(அ) கணினி மயமாக்கல் (ஆ) தொழில் மயமாக்கல்

(இ) உலக மயமாக்கல் (ஈ) வணிக மயமாக்கல்

14. பாரதி, சிவப்பு வண்ணத் தாளில் வெளியிட்ட இதழ் :

(அ) விஜயா (ஆ) இந்தியா

(இ) சுதேசமித்திரன் (ஈ) கர்மயோகி

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும். 3x2=6

15. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது ?

16. காவடிச் சிந்து என்பது யாது ?

17. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை ?

18. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

[ திருப்புக

GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL
Perundurai R.S.
PH: 9486379461, 8344933377

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்கவும். 2x2=4

19. இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை ?

20. ஓதற்பிரிவு என்பதன் பொருள் என்ன ?

21. மதிப்புக் கூட்டுப் பொருள்கள் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.

## பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு** விடை தருக. 7x2=14

22. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.

(அ) புகழெனின் (ஆ) உலகனைத்தும்

23. ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.

(அ) அலர்ந்து (ஆ) ஆழ்க

24. இலக்கணக் குறிப்பு எழுதுக.

(அ) உடை அணிந்தேன் (ஆ) அறிதல்

25. பின்வரும் மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

கலை, களை, கழை

26. எண்ணும்மைத் தொடர்கள் இரண்டனை எழுதுக.

27. உள்ளுறை உவமம் என்றால் என்ன ?

28. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

கால்நடை

29. நிறுத்தற் குறியிடுக :

அறம் பொருள் இன்பம் வீடு என வாழ்க்கைப்பேறு நான்கு

30. அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதியைக் கொண்டு விடுகதைக்குரிய ஆக்கப் பெயரை எழுதுக.

வேவு பார்த்திடுவான்; ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி)

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்கவும். 2x4=8

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம் பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது ?

32. வடகரை நாட்டின் இயற்கை வளங்களைக் குறிப்பிடுக.

33. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகத் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை ?

34. மறுவிலாத அரசென இருந்த மாநகர் உவமையைப் பொருளுடன் விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்கவும். 2x4=8

35. ஐந்து வேளாண்மை மந்திரங்கள் யாவை ?

36. சமணப் பள்ளிகள் பற்றி குறிப்பு வரைக.

37. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு வெளிப்படுத்தும் சமுதாயச் செய்திகள் யாவை ?

38. ஃப்ரெஸ்கோ ஓவியங்கள்; கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை ?

[ திருப்புக

GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL
Perundurai R.S.
PH: 9486379461, 8344933377

XI - SEPTEMBER 2020

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு** விடையளிக்கவும். 3x4=12

39. சொல் பின்வரும் நிலையணி (அல்லது) உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் எவையேனும் மூன்று நயங்கள் மட்டும்)

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.

**- நாமக்கல் கவிஞர்.**

41. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் தருக.

42. குறிஞ்சித் திணையைப் பற்றி குறிப்பிடுக.

43. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்குக் கவிதை புனைக.
தாய்நாடு அல்லது மலையருவி

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல்** விடை தருக. 3x6=18

44. (அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீவிர் அறிவன யாவை ?

**அல்லது**

(ஆ) இயற்கையைப் போற்றும் கவிதைகளாக ஆத்மாநாம் கவிதைகள் விளங்குவதை நிறுவுக.

GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL
Perundurai R.S.
PH: 9486379461, 8344933377

45. (அ) ''இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன''

-இக்கூற்றினை மெய்ப்பிக்க.

**அல்லது**

(ஆ) தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.

46. (அ) சிம்பொனித் தமிழரின் சிறப்புகளை விரிவாக எழுது ? அவர் இசைத்தமிழுக்கு ஆற்றியத் தொண்டுகள், விருதுகள் பற்றி குறிப்பிடுக.

**அல்லது**

(ஆ) தமிழர் வாழ்வோடும், புலம் பெயர் நிகழ்வோடும் அ. முத்துலிங்கத்தின் திணைப் பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது ?

## பகுதி - V

4+2=6

47. **அடிபிறழாமல்** செய்யுள் வடிவில் எழுதுக.

(அ) உண்டால் அம்ம ..... எனத் தொடங்கும் புறநானூற்று பாடலை எழுதுக.

(ஆ) உணின் என முடியும் குறட்பாவை எழுது.

- o O o -

GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL
Perundurai R.S.
PH: 9486379461, 8344933377